**தலைப்பு : 321 – கிழக்கு மாகாண சபை தொடர்பான**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

## 1. தூரநோக்கு, செயற்பணி மற்றும் பிரதான செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

கிழக்கு வாழ் மக்களிற்கு சிறப்பானதும் அமைதி நிறைந்ததுமான ஒரு உன்னத வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

### 1.2 செயற்பணி

மனித மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்துவதன் மூலம் நல்லாட்சியினூடாக நிலையானதும் மேன்மையானதுமான வாழ்க்கைத்தரத்தை சமூக மற்றும் கலாச்சார விழுமியங்கள் பேணப்படுவதன் மூலம் கிழக்கு வாழ் மக்களிற்கு ஏற்படுத்திக் கொடுத்தல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபையின் அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

கிழக்கு மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 21,091,408,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 18,148,294,014 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 2,943,113,986 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 14 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 16,114,708,000 | 13,783,708,000 | 2,331,000,000 | 14 |
| மூலதனம் | 4,976,700,000 | 4,364,586,014 | 612,113,986 | 12 |
| மொத்தம் | 21,091,408,000 | 18,148,294,014 | 2,943,113,986 | 14 |

மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபை நிதியத்தின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.